18.09.2025

புதுக்கோட்டை ஜெ.ஜெ.கலை அறிவியல் கல்லூரியின் (தன்னாட்சி) செப்டம்பர் 16.09.2025 மற்றும் 17.09.2025 ஆகிய தேதிகளில் தேசிய புத்தக வாசிப்பு தினத்தை கொண்டாடும்பொருட்டு புத்தகக் கண்காட்சி நடைபெற்றது. கண்காட்சியை கற்பக விநாயகா கல்வி அறக்கட்டளையின் அறங்காவலர் முனைவர் கவிதா சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார். கல்லூரி முதல்வர் முனைவர் ஐ.பரசுராமன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

அவர் தம் உரையில் மாணாக்கர்கள் புத்தகங்களை வாசிப்பதன வழி அறிவு வளர்ச்சி, சிந்தனை திறன், கற்பனைத் திறன், கலாச்சாரம், பொழுதுபோக்கு மற்றும் மனப்பயிற்சி ஆகியவற்றை வளர்த்துக்கொள்ள ஊன்றுகோலாகவும் தூண்டுகோலாகவும் அமையும் என்று கூறினார்.

இவ்விழாவில் புதுக்கோட்டை நியூஸ் செஞ்சுரி புத்தக நிலையம் மற்றும் திருநெல்வேலி ஜூபிடர் புத்தக நிலையம் ஆகிய நிறுவனங்கள் கலந்கொண்டு ஏராளமான புத்தகங்களை காட்சிப்படுத்தினர். மாணாக்கர்கள் துறை சார்ந்த புத்தகங்கள், பொது அறிவு மற்றும் போட்டித் தேர்வுக்கான புத்தகங்களை 20% கழிவுடன் பயனடைந்தனர்.

புத்தகக் கண்காட்சிக்கான ஏற்பாட்டை கல்லூரி நூலகர் முனைவர் சி.ராஜாங்கம் செய்திருந்தார்.